மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த அக்கரையோடு சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் எந்த அளவுக்குச் சாத்தியமோ அந்த அளவுக்கு அரசு பரிசீலித்து அதிலே எந்தவித மான அபிவிருத்தி செய்ய இயலும் என்பதை ஆராய்ந்து அதற்கு முயற்சி செய்யும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே இந்த கும்பக்கரை அருவியும், சுருளியாறு நீர்வீழ்ச்சியும் மிகப் பிரசித்திப் பெற்ற நீர்வீழ்ச்சிகளாக இருக்கின்றன. ஆகவே இந்த இரண்டு நீர் வீழ்ச்சிகளையும் இணைத்து ஒரு சுற்றுலாப் பேருந்து விட அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, பேருந்து விடுவதற்கு சாலை வசதிகள் வேண்டும். அதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவிட வேண்டும். பேருந்து விடுவதினால் மட்டும் அது சுற்றுலா வளர்ச்சியாக அல்லது சுற்றுலா ஸ்தலமாக மாறிவிடாது.

பேராவூரணித் தொகுதி 'மனோரா'வை சுற்றுலா மையமாக்கல்.

*வினா எண். 815—திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் பேராவூரணித் தொகுதியில் மன்னர் சரபோஜியால் கட்டப்பட்ட 'மனோரா'வைச் சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு ''சுற்றுலா மையம்'' ஆக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தஞ்சை மாவட் டத்தில் ''மனோராவையும்'' ''கல்லணையையும்'' மாவட்ட உலாத் தலங்களாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் கல்லணையை மாவட்ட உலாத்தலமாக மாற்ற முடிவெடுக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் மனோராவை ஒரு மாவட்ட உலாத் தலமாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9—10]

திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவரவர்களே, நாளுக்கு நாள் மிக மோசமாக பழுதடைந்து கொண்டிருக்கும் மனோராவை

சீர்படுத்தி அதனுடைய பழமை கெடாமல் தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூலம் பாதுகாத்திட அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மனோரா என்ற அந்த சரித்திரப் புகழ் மிக்க சின்னம் இப்போது தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பிலே இருக்கின்றது. அதைச் சீர்படுத்திப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத் துறை தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு அறிவுறுத்தும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, மனோராவை தொல்பொருள் ஆய்வுத் துறை பழுது பார்க்கட்டும்; அதைப் பாதுகாக்கட்டும். ஆனால் அதே நேரத்தில் அங்கு வரும் சுற்று லாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, உணவு விடுதி, ஓய்வு எடுப்பதற்கு பூங்கா, நீச்சல் குளம் ஆகிய வசதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் உடனடியாகச் செய்து தர இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மனோரா என்கிற அந்த இடத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சிறப்பே 1814 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் வெற்றியைக் குறிக் கின்ற வகையில் சரபோஜி மன்னரால் எழுப்பப்பட்ட கட்டிடமும் மனோரா என்ற அந்த நினைவுச் சின்னமும்தான். இதுதான் அதற்கு அடிப்படைக் காரணமுமாகும். அதைவிட மிகச் சிறப்பு என்னவென்றால் அது மிகச் சிறந்த கடற்கரைப் பகுதியாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே கடலில் அலைகள் அதிக மாக அடிப்பது கிடையாது. மேலும் அங்கே சுறா மீன்கள் போன் றவை கிடையாது. குறிப்பாக திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு அருகிலே இருக்கின்ற மிகச் சிறந்த மணற்பரப் பான கடற்கரைப் பகுதியாக அது விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே அதனை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற முடியும் என்று சுற்றுலா அதிகாரிகள் அரசுக்கு சில திட்டங்களைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். முதலிலே அந்த மனோரா என்று அழைக் கப்படுகின்ற நினைவுச் சின்னம் பாதுகாக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து சுற்றுலாத் துறை அந்த முயற்சியை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெவின்யூ கண்மாய்களுக்கான மீன்பாசி பாத்யதை.

*வினா எண் 816— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—